2023 அக்டோபர் 10] [திரு. தா.மோ. அன்பரசன்]

முனைப்புடன் செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நாடறியும். எனவே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகளைச் சேர்ந்தவர்களெல்லாம், யாருடைய தூண்டுதலுக்கும் ஆட்படாமல், தமிழ்நாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு, தொழிலாளர்களுடைய நலனைப் பேணி காத்திட, தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று MSME *நிறுவனங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இதுதான் அரசினுடைய விளக்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) விளக்கம், விளக்கம் சொல்லியாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் அளிக்கிறீர்களா, அளிக்கவில்லையா?*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுத் தலைவராக என்னை நியமனம் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினுடைய 2023–2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவினுடைய 20 ஆவது அறிக்கையை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

பிற்பகல் 1–15

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. அ. சௌந்தரபாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

TRUTH ALONE TRIUMPHS